சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திண்டுக்கல் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திரு.ஆ.செல்வம் என்பவரின் திருமணமான மகள் திருமதி.செ.ஜோதி என்பவர் திண்டுக்கல் மாவட்டத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.3) துறை**

**அரசாணை (3ப) எண்.40** | **நாள் :29.09.2020.**
**சார்வரி, புரட்டாசி, 13,**
**திருவள்ளுவர் ஆண்டு– 2051**

5811
2/12/20

**படிக்கப்பட்டவை:**

1. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை எண்.8976/2017/ஊ.வ.1, நாள் 04.06.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு–1) துறை, நாள் 23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.23066/2019/டி3, 10.02.2020.

* * * * *

**ஆணை:**

திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், வேடசந்தூர் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 22.09.2017 அன்று பணியிடைக்காலமான திரு.ஆ.செல்வம் என்பவரின் வாரிசுதாரராகிய திருமணமான மகள் திருமதி.செ.ஜோதி என்பவருக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 11.06.2018 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் பணியினை வரன்முறை செய்யக் கோரி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசிற்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் திருமதி.செ.ஜோதி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 20.11.2017 அன்று விண்ணபித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 17.05.1985 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 32 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 33 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், வேடசந்தூர் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 22.09.2017 அன்று பணியிடைக்காலமான திரு.ஆ.செல்வம் என்பவரின் வாரிசுதாரரான அவரது திருமணமான மகள் திருமதி.செ.ஜோதி என்பவருக்கு கருணை அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டத்தில் 11.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து பணப்பலன்கள் நியமன நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றை திருமதி.செ.ஜோதி என்பவர் பொருட்டு தளர்வு செய்து தனியரது பணியை 11.06.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 11.09.2020 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.12254/ட்டி–1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.22067/ஜி1/2020, நாள் 16.09.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம்
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல கணக்குத் துறை இயக்குநர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திண்டுக்கல் மாவட்டம்

**நகல்:**
திருமதி.செ.ஜோதி, இளநிலை உதவியாளர்,
திண்டுக்கல் மாவட்டம். (திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

மே.மு.ந.க.எண்.1844/2020/அ1
நகல் சார்பு செய்யப்படுகிறது

**பிரிவு அலுவலர்**

பெறுநர்
செ.ஜோதி
இ.நி.உதவியாளர்
நிலக்கோட்டை
ஊராட்சி ஒன்றியம்.

2/12/20

**வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.),**
**நிலக்கோட்டை.**